# வாழ்க்கைப் பாடம்

''தூண்டுகோல் இருப்பின் தீபம் பிரகாசமாக எரியும்'' என்பர். இது உண்மையிலும் உண்மை! வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்தவர்களும் தங்கள் சுற்றத்தாரின் தூண்டுகோலினால் வாழ்வில் முன்னேறி, இன்று புகழின் உச்சியில் இருப்பதை நாம் காண்கிறோம். ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் முன்னேற அவனுக்கு அவனது சுற்றத்தாரின் ஆதரவு தேவை. இது போன்று எனது வளர்ச்சியிலும் அக்கறை காட்டி, பங்கேற்பவர்கள் எனது பெற்றோரும் பள்ளி ஆசிரியர்களும் ஆவர். என் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிவரும் பங்கை இக்கட்டுரையில் காண்போம்.

''நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்'' என்பது ஆன்றோர் வாக்கு. நமது வாழ்வில் நமது இன்ப துன்பங்களில் சம அளவில் பங்கேற்று, நமக்கு உதவுபவர்கள் நமது குடும்பத்தினர். அது போலத்தான், எனது குடும்பத்தினரும் எனக்கு உதவுகினறனர். ''அம்மா என்றால் அன்பு, அப்பா என்றால் அறிவு. ஆசான் என்றால் கல்வி'' என்ற பிரபல திரைப்பாடலுக்கேற்ப அன்பும் அறிவும் ஊட்டி என்னை ஒரு சிறந்த மாணவியாகவும் நாட்டுக்கும் வீட்டுக்கும் பங்காற்றக்கூடிய குடிமகனாகவும் ஆக்குகின்றனர்.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; பின் நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பதிலே'' என்னும் பாடலை யாரும் மறக்க முடியாது. அது கூறும் கருத்தையும் மறக்க முடியாது. ஓர் அன்னை குழந்தைக்குப் போதிக்கும் நற்குணங்களே அவனை வெளியுலகுக்குத் தயார்ப்படுத்துகின்றன. எனது பெற்றோர் நான் சிறு குழந்தையாக இருந்ததிலிருந்து எனக்குப் பல நற்குணங்களைப் போதித்து வந்துள்ளனர்.

நான் கிணற்றுத்தவளையாக வாழ்ந்துவிடக்கூடாதென்று மிகுந்த அக்கறை கொண்ட எனது பெற்றோர், என்னை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று, பசி, பிணி ஆகியவற்றால் வாடும் மக்களும் இவ்வுலகில் உள்ளனர் என்பதைக் காட்டியுள்ளனர். இது போன்ற மக்கள்மீது அனுதாபப்பட்டு உதவ வேண்டும் என்ற உணர்வையும் வளர்த்துள்ளனர். ஒரு மனிதனின் வாழ்க்கை, பள்ளித் தேர்வுகளில் சிறப்பாகச் செய்து உச்சத் தேர்ச்சி பெற்று, பின் நல்ல வேலையில் சேர்ந்து பணம் சம்பாதிப்பதில் மட்டும் அடங்கிவிடாது. அவதியுறுவோருக்கு உதவி, மக்களுக்குச் சேவை செய்வதே வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாக மாற்றுகிறது என்று கற்றுக் கொடுத்துள்ளனர்.

என் பெற்றோருக்கு அடுத்து, எனது வளர்ச்சியில் அதிக ஈடுபாடுள்ளவர்கள் என் பள்ளி ஆசிரியர்களும் நண்பர்களும் ஆவர். ''கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'', ''கண்ணுடையார் என்பர் கற்றோர்'' என்று எனக்குக் கற்றலின் அவசியத்தைப் பற்றிக் கூறியுள்ளனர். கற்றல், பள்ளி நாள்களுக்குப் பின் நின்றுவிடாது, ஒருவன் தான் இப்புவியில் வாழும் வரை கற்க வேண்டும் என்றும் நான் அவர்களிடமிருந்துதான் அறிந்து கொண்டேன். ''உண்மையில் பெருங்கடல் நம்மால் அறியப்படாமல் உள்ளது. ஆனால், நாமோ கடற்கரையில் நின்று, மணலில் விளையாடி, கடற்பாசியைக் கண்டு இன்புறும் குழந்தைகளைப் போல் இருக்கிறோம்'' என்று அறிஞர் ஒருவர் கூறியதன் மூலம் ''கற்றது கைமண்ணமளவு கல்லாதது உலகளவு'' என்று உணர்ந்து கொண்டேன்.

**"யானையின் பலம் எதிலே? - தும்பிக்கையிலே,**
**மனிதனின் பலம் எதிலே? - நம்பிக்கையிலே"**

என்பதை நான் என் ஆசிரியர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் அறிந்து கொண்டேன். ‘‘வாழ்க்கை என்பது ஒரு ரோஜா மலர்ப் படுக்கையன்று, அதில் போராடி வெற்றியடைவதற்குத் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் தன்முனைப்பும் அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி’’ என்று என் பள்ளி நடத்திய முகாம்களின் மூலமும் பட்டறைகளினும் மூலமும் புரிந்துகொண்டேன். தோல்விகள் வந்து குவிந்த போதும் சோர்ந்துவிடாது, உழைத்துச் சோதனைகளைச் சாதனைகளாக்கியவர்களை எனது பள்ளி எனக்கு அறிமுகப்படுத்தியது. நானும் அவர்களைப் போல் இருக்கவேண்டுமென உறுதி பூண்டுள்ளேன்.

இதுபோல என் வளர்ச்சிக்கு என் பெற்றோரும் பள்ளி ஆசிரியர்களும் செய்தனவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். அவர்கள் எனக்கு ஒரு பாடத்தை மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை. வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தனர், கற்றுக் கொடுக்கின்றனர், இன்னும் கற்றுக் கொடுப்பர். இதனால், நான் அவர்களுக்கு என்றென்னும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**கேவர்த்தனி தமிழ்ச்செல்வம்**
**Paya Lehar Methodist Girls’ Secondary School**
**Sec 1HT2**